முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர். வேலூர் மாவட்டம்
ஐ.டி.எண்.57/2025

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 01-ஆம் தேதியில் திரு. அண்ணாதுரை என்பவரது வாக்குமூலம் (1908-ஆம் ஆண்டின் சட்டம் 10-வது கட்டளை மற்றும் தொழில் தகராறு சட்டம் 1947 ஏற்பாட்டின் படி) திருமதி.A.K.நாசினி, Deputy Nazir என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.
Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 01.06.2026.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | அண்ணாதுரை |
| 2. | தந்தை பெயர் | : | அப்பாவு |
| 3. | தொழில் | : | |
| 4. | வயது | : | |
| 5. | முகவரி | : | |

<u>**முதல் விசாரணை**</u>:-

தொழிலாளர் தரப்பு சாட்சி 1 என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான். நான் சார்ந்த தொழிற்சங்கத்தின் பதிவு சான்று நகல் **தொ.த.சா.ஆ.1.** போக்குவரத்து கழகத்தால் எனக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையின் நகல் **தொ.த.சா.ஆ.2**. என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் **தொ.த.சா.ஆ.3.** 07.11.2015 அன்று ஏற்பட்ட விபத்து குறித்து நான் அளித்த விளக்க கடிதம் **தொ.த.சா.ஆ.4.** அதே தேதியில் நிர்வாகம் எனக்கு அளித்த தற்காலிக வேலைநிறுத்த உத்தரவின் நகல் **தொ.த.சா.ஆ.5**. 28.11.2015 அன்று நிர்வாகம் தற்காலிக வேலைநீக்கத்தில் இருந்து என்னை நீக்கி பணியில் சேரும்படி பிறப்பித்த உத்தரவின் நகல் **தொ.த.சா.ஆ.6**. 14.12.2015 அன்று எனக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை நகல் **தொ.த.சா.ஆ.7**. 22.02.2017 அன்று நிர்வாகம் எனக்கு அளித்த காரணம் கேட்கும் குறிப்பாணையின் நகல் **தொ.த.சா.ஆ.8**. அதற்கு 06.04.2017 அன்று நான் அளித்த விளக்க கடிதத்தின் நகல் **தொ.த.சா.ஆ.9**. 24.04.2017 அன்று நிர்வாகம் பிறப்பித்த இறுதி

ஆணையின் நகல் **தொ.த.சா.ஆ.10**. 20.09.2017 அன்று ஆத்தூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் நகல் **தொ.த.சா.ஆ.11**. நான் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு தொழிற்தாவாவை எழுப்பினேன் அதில் சமரசம் ஏற்படாததால் தொழிலாளர் உதவி ஆணையர் பதிவு செய்த சமரச முறிவு அறிக்கை நகல் **தொ.த.சா.ஆ.12**.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.06.01 15:25:30 +0530

Presiding Officer,
Principal Labour Court,
Vellore.